மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். அது நிர்வாகப் பொறியாளரின் ஆராய்ச்சியில் உள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்தப் பிரச்சினை ரொம்ப நாட்களாக இருந்து வருகிறது. மழைக்காலங்களில் போக்குவரத்து தடைப்பட்டு விடுகிறது, பஸ் போக்குவரத்து தடைப்பட்டு விடுகிறது. ஏரியின் பக்கத்தில்தான் ஹரிஜனத் தெரு இருக்கிறது. அவர்களுக்குள்ள கொஞ்சநஞ்ச நிலங்களும் அங்குதான் இருக்கின்றன. மழை பெய்தால் தண்ணீர் வடிவதற்கு ரொம்ப நாட்கள் ஆகின்றன. ஆகவே, அரசாங்கம் இதில் உடனடியாகத் தலையிட்டு அங்கு ஒரு கலுங்கு கட்டிக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஏரியின் பெயரே எரும்பூர் ஏரி, எரும்பு ஊறுவதுபோல் இருக்கிறது. இப்போது வேகமாக நடவடிக்கைகள் எடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 253, 254, 255, 256, 257, 258, 259, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோள்படி, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். கேள்வி எண் 260.

THIRU K. VINAYAGAM: On a Point of Order, Sir. I want some clarification. The Hon. Minister is present here in full flesh and blood, in his wholesome capacity. Questions have been tabled and they are in the Agenda. Members are eager to know the answers. When such is the case, why should the Hon. Minister refuse to answer the question?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு எடுத்துக்கொள்ளப்படும், மறுக்கவில்லை.

திரு. கே. விநாயகம் : பிறகென்றால் ?
At the end of question-hour?

Mini-buses

* 260 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) Whether mini-buses are being introduced by the State Transport Department;

(*b*) the places where they are introduced;

(*c*) the cost of the manufacture of these buses; and

(*d*) the passenger capacity?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) முதல் (ஏ) வரை : இவ்வினாக்களுக்கு இடமில்லை.

1969 செப்டம்பர் 12]

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த மினி பஸ் என்று அழைக்கப்படும் குட்டி பஸ் விடுவதை இந்த அரசாங்கம் கைவிட்டு விட்டதா அல்லது ஒத்திப்போட்டு இருக்கிறதா? இதுபோன்றதொரு பஸ்ஸில் அமைச்சர் அவர்கள் பயணம் போய் வந்ததாகப் பத்திரிகைகளில் பார்த்தோம். அந்த யோசனை எந்த அளவில் இருக்கிறது என்பதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்த சிறு பஸ்களை ஓட்டுவது என்ற எண்ணம் கைவிடப்பட்டு விடவில்லை. நிலைமை எப்படி இருக்கிறது என்றால், நான்கு சக்கரங்களைக் கொண்ட பஸ்களை ஓட்டுவது என்றால் செலவு அதிகமாகிறது. ஆகவே, கட்டணத்தை உயர்த்தவேண்டி இருக்கிறது. மூன்று சக்கரங்களைக் கொண்ட "டெம்போவை" அரசாங்கம் ஓட்டுவது என்பது அவ்வளவு உயர்வாகத் தெரியவில்லை. ஆகவே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் மட்டும் மூன்று சக்கரங்கள் உள்ள சில கார்களை ஓட்டி, பரிட்சை செய்து பார்த்து, ஆறு மாதங்களுக்குப் பிறகு மீண்டும் அதன் முடிவைத் தெரிவிக்கும்படி, கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இந்த மினி பஸ்களைப் பொறுத்த வரையில் மாதிரி பஸ்கள் இங்கு செகரட்டேரியேட்டுக்குக் கூட கொண்டுவரப்பட்டு அந்த பஸ்களை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டதாகவும் அந்தப் படங்கள் கூட பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு இருக்கின்றன. இம்மாதிரி முக்கியமான முடிவுகள் எடுக்கப்படுகிற நேரத்தில் அவற்றின் இலாப நஷ்டக் கணக்கைப் பார்த்து, அது சாத்தியமா இல்லையா என்பதைப்பற்றி முடிவு எடுத்த பிறகு இதைப்பற்றி பொது மக்களுக்குத் தெரிவிப்பது நல்லதில்லையா? முடிவுகள் எடுப்பதற்கு முன்பாகவே விளம்பரம் என்ற அளவில் இப்படி முடிவைத் தெரிவிப்பது என்பது எந்தக் கட்சிக்கும் நன்மை பயப்பதாக இல்லை என்பதை அரசாங்கம் உணருகிறதா?

(விடை இல்லை.)

சாலை போக்குவரத்து வாரியம்

*261 **வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'சாலை போக்குவரத்து போர்டு' நிறுவும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், அவ்வாறு நிறுவுவதின் முக்கிய நோக்கம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS